நகல்

23.2.06 பா. ஐ. சின்னசாமி

நகல் -1

2

சிவமயம். பாலக்காடு,
23.2.06

பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் சமுகத்துக்கு

இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமந்தெரிந்து கொள்ள வேணவாவுடையேன்.

தாங்கள் 4.1.06ல் தயை செய்தனுப்பிய கடிதம் பெற்று எல்லாந்தெரிந்து கொண்டேன்.

மதுரை, கும்பகோணம் முதலிய இடங்களில் மஹாஜன சபையினர் கூடி, தாங்கள் "மஹாமஹோபாத்தியாயப்" பட்டம் பெற்றதைக்குறித்துக் கொண்டாடினார்கள் என்று தெரிந்து மிகவும் சந்தோஷித்தேன். முன் 1903 ஜனவரி 5 தேதியில் கும்பகோணத்தில் தங்களைக்கண்டு பிரிந்தபின் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களையும், மஹாவித்வான் பிள்ளையவர்களையும் ஒருங்கு நேரே பார்த்தவகை எண்ணிச் செய்துவிட்டதாய்த் தங்களுக்குக் கடிதமெழுதியிருந்த ஞாபகம் இப்போதுமிருக்கிறது. மூன்று வருடங்களுக்குப் பின்னேனும் எனது அபிப்பிராயம் உண்மையேயென்று கவர்ன்மெண்டார் பட்டமளித்து விளக்கியதால் மிகவும் ஆநந்திக்கிறேன்.

பிரம்மஸ்ரீ கிருஷ்ணையரவர்கள் நீலகிரிக்குப் போவதாய் எழுதியிருந்தார்கள். போயிருந்தால் அவர்கள் மேல்விலாசம் தெரிவிக்கக் கோருகிறேன்.

எல்லாவிஷயங்களுக்குந் தங்கள் கடிதமெதிர்பார்க்கிறேன்.

அன்பன்,
பா. ஐ. சின்னசாமி.

நகல்

72. பக். 142

ஜா/.

20

பாலக்காடு
பா. ஐ. சின்னசாமி....
23.2.06
பக். 1

P. 300 – 301.
த. க. Vol 'C'

ஜி
Copied

(44)